# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## ஜம்மிய்யத்துஸ் ஸஹ்வா அல்-கைரிய்யா (ஜஸ்கா)
## (கூட்டிணைத்தல்)

**ஜம்மிய்யத்துஸ் ஸஹ்வா அல்-கைரிய்யா (ஜஸ்கா) வைக்**
**கூட்டிணைப்பதற்கானதொரு சட்டமூலம்**

---

*வன்னி மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ கே. காதர் மஸ்தான் அவர்களால்*
*2016, பெப்புருவரி மாதம் 11 ஆம் திகதியன்று சமர்ப்பிக்கப்பட்டது*

*(2015, திசெம்பர் மாதம் 14 ஆம் திகதியன்று வர்த்தமானியில் வெளியிடப்பட்டது)*

*பாராளுமன்றத்தால் அச்சிடப்பணிக்கப்பட்டது*

---

[ *81* **ஆம் சட்டமூலம்** ]

---

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது
கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா *11.00***　　　　**தபாற் செலவு : *10.00***

**ஜம்மிய்யத்துஸ் ஸஹ்வா அல்-கைரிய்யா (ஜஸ்கா)**
**(கூட்டிணைத்தல்)**

## ஜம்மிய்யத்துஸ் ஸஹ்வா அல்-கைரிய்யா (ஜஸ்கா)வைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்

*முன்னுரை.*

''ஜம்மிய்யத்துஸ் ஸஹ்வா அல்-கைரிய்யா (ஜஸ்கா)'' என அழைக்கப்படுவதும் அறியப்படுவதுமான அமைப்பொன்று அதன் உறுப்பினர்களால் இணங்கிக்கொள்ளப்பட்ட விதிகளுக் கிணங்க சொல்லப்பட்ட மன்றத்துடன் தொடர்புபட்ட எல்லாக் குறிக்கோள்களையும் கருமங்களையும் பயனுற நிறைவேற்றிக் கொண்டுநடாத்தும் நோக்கத்துக்கென பாலமுனையில் இதற்கு முன்னால் தாபிக்கப்பட்டுள்ளதாதலாலும் :

அத்துடன் சொல்லப்பட்ட அமைப்பு எந்தப் பல்வேறு குறிக் கோள்களுக்காகவும், கருமங்களுக்காகவும் உருவாக்கப்பட்டதோ அந்தப் பல்வேறு குறிக்கோள்களையும், கருமங்களையும் இதுகால வரை வெற்றிகரமாக நிறைவேற்றியும் கொண்டுநடாத்தியும் வந்துள்ளதாதலாலும், அது கூட்டிணைக்கப்பட விண்ணப்பித் துள்ளதாதலாதும், சொல்லப்பட்ட விண்ணப்பத்தை அனுமதித் தல் பொதுமக்கள் நன்மைக்கானதாகவிருக்குமாதலாலும் :

இலங்கைச் சனநாயகச் சோசலிசக் குடியரசின் பாராளு மன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

*சுருக்கப்பெயர்.*

***1***. இச்சட்டம் 2016 ஆம் ஆண்டின் ஆம் இலக்க, ஜம்மிய்யத்துஸ் ஸஹ்வா அல்-கைரிய்யா (ஜஸ்கா) (கூட்டிணைத்தல்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

*ஜம்மிய்யத்துஸ் ஸஹ்வா அல்-கைரிய்யா (ஜஸ்கா)வைக் கூட்டிணைத்தல்.*

***2***. இச்சட்டம் தொடங்கும் திகதியிலிருந்தும் அதன்பின்னரும் (இதனகத்துப்பின்னர் ''அமைப்பு'' என குறிப்பீடுசெய்யப்படும்) ஜம்மிய்யத்துஸ் ஸஹ்வா அல்-கைரிய்யா (ஜஸ்கா)வின் தற்போதைய உறுப்பினர்களாகவுள்ள அல்லது இத்தால் அமைத் துருவாக்கப்படும் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களாக, இனிமேல் சேர்த்துக்கொள்ளப்படும் அத்தகையோரான அத்தனை ஆட்களும், (இதனகத்துப்பின்னர் ''கூட்டுத்தாபனம்'' எனக் குறிப்பீடுசெய்யப்படும்)''ஜம்மிய்யத்துஸ் ஸஹ்வா அல்-கைரிய்யா (ஜஸ்கா)'' என்னும் பெயர்மகுடத்தின்கீழ் இடையறா வழியுரிமைகொண்ட கூட்டிணைக்கப்பட்ட ஒரு குழுவாதல் வேண்டும் ; அதத்துடன் அப்பெயர்கொண்டு அது வழக்குத் தொடுக்கலாமென்பதுடன் அதற்கெதிராக வழக்குத் தொடுக்கவும் படலாம் ; அத்துடன் அது பொது இலச்சினையொன்றை வைத்திருக்கவும், பயன்படுத்தவும், அது விரும்பியாங்கு அதனை மாற்றவும் முழுத்தத்துவமும், அதிகாரமும் உடையதாயிருத்தலும் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் பொதுக் குறிக்கோள்கள்.

**3.** கூட்டுத்தாபனம் அமைத்துருவாக்கப்படுவதற்கான பொதுக் குறிக்கோள்கள் பின்வருவனவாதல் வேண்டுமென இத்தால் வெளிப்படுத்தப்படுகிறது :-

(அ) மக்களின் சமூக, பொருளாதார, கல்வி மற்றும் கலாசாரத்தினை மேலோங்கச் செய்தல் ;

(ஆ) சமூகசேவைகளைச் செய்தல் ;

(இ) அனர்த்தங்களால் அல்லலுற்றவர்களுக்கும் உதவி யிழந்தவர்களுக்கும் ஆதரவளித்தல் ;

(ஈ) வறியோர்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்துதல் ;

(உ) முதியவர்கள், ஊனமுற்றோர், அநாதைகள், விதவை களை இனங்கண்டு அவர்களுக்கு உதவுதல் ;

(ஊ) சிறுவர்கள், மகளிர் ஆகியோரின் உரிமைகளைப் பாதுகாத்தல் மற்றும் அவர்களுக்கு உதவுதல் ;

(எ) இஸ்லாமிய வழிகாட்டல்களை மேற்கொள்ளல் ;

(ஏ) விசேடமாக இஸ்லாமிய கற்கைகளையும் பொதுவாக கல்வியினையும் ஊக்குவிக்க நடவடிக்கையெடுத்தல் ;

(ஐ) ஸஹாபாக்கள், தாபிஈன்கள், தபஉத்தாபிஈன்களின் விவரணங்கள், விளக்கங்கள் மற்றும் அல்குர்ஆன், அஸ்ஸுன்னாவின் வழிகாட்டலில் இஸ்லாமிய போதனைகளை முன்னெடுத்துச் செல்லல் ;

(ஒ) சமூகங்களுக்கு மத்தியில் ஒற்றுமையையும் புரிந்துணர் வையும் மேலோங்கச் செய்தல் ;

(ஓ) சமூகங்களுக்கு மத்தியில் அமைதி மற்றும் நட்புணர்வை ஏற்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளல் ; அத்துடன்

(ஔ) கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கும் அல்லது எழுத் திலான வேறு ஏதேனும் சட்டத்திற்கும் ஒவ்வாதனவாக விராத வகையில், மேற்படி குறிக்கோள்களை எய்துவதற்கு அவசியமானவையும் அதன் இடைநேர் விளைவானவையும் அல்லது அதற்கு உகந்தவையுமான அத்தகைய மற்றெல்லாச் செயல்களையும் காரியங்களை யும் செய்தல்.

**4.** இச்சட்டத்தினதும் வேறேதேனும் எழுத்திலான சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கமைய, கூட்டுத்தாபனம் பின்வரும் தத்துவங்களுட்பட, கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை அல்லது அவற்றுள் ஏதேனுமொன்றை மேம்படுத்துவதற்கு அல்லது முன்னெடுத்துச் செல்வதற்கு அவசியமானவாறான அல்லது விரும்பத்தக்கவாறான அத்தகைய எல்லாச் செயல் களையும், கருமங்களையும் செய்வதற்கும், புரிவதற்கும், நிறை வேற்றுவதற்கும் தத்துவமுடையதாதல் வேண்டும் :- கூட்டுத்தாபனத்தின் பொதுத் தத்துவங்கள்.

(அ) உள்நாட்டு, வெளிநாட்டு மூலங்களிலிருந்து நிதிகளைத் திரட்டுவதற்கும், காசாக அல்லது பொருளாக மானியக்கொடைகளை, கொடைகளை அல்லது நன்கொடைகளை பெறுவதற்கும் ;

(ஆ) ஏதேனும் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனத்தை எத்தகையதுமான எம்முறையிலும் கொள்ளுவதற்கும், வைத்திருப்பதற்கும், குத்தகைக்கு அல்லது கேள்வுக்கு எடுப்பதற்கும் அல்லது கொடுப்பதற்கும், வாடகைக்கு விடுவதற்கும், விற்பதற்கும் அல்லது வேறுவகையாகக் கையுதிர்ப்பதற்கும் மற்றும் கூட்டுத்தாபனத்தின் தொழிலுக்கு அவசியமான அல்லது வசதியான எவையேனும் கட்டிடங்களை அல்லது கட்டுவேலை களை நிர்மாணிப்பதற்கும், பேணுவதற்கும், மாற்று வதற்கும் ;

(இ) நாணயமாற்றுண்டியல்கள், காசோலைகள், வாக் குறுதிப்பத்திரங்கள் மற்றும் ஏனைய கைமாற்றத்தகு சாதனங்கள் என்பவற்றை ஆக்குவதற்கும், வரைவதற் கும், ஏற்றுக்கொள்வதற்கும், கழிப்பனவு செய்வதற்கும் புறக்குறிப்பிடுவதற்கும், பேச்சுவார்த்தைமூலம் பெறு வதற்கும், வாங்குவதற்கும், விற்பதற்கும், வழங்குவதற் கும், வங்கிக்கணக்குகளைத் திறப்பதற்கும், தொழிற் படுத்துவதற்கும், மூடிவிடுவதற்கும், பிணைப்பொறுப் புடனோ பிணைப்பொறுப்பின்றியோ பணம் கடன் பெறுவதற்கும் அல்லது திரட்டுவதற்கும் ;

(ஈ) கூட்டுத்தாபனத்தின் நோக்கங்களுக்காக உடனடியாக தேவைப்படாத எவையேனும் நிதிகளை முகாமைப் பேரவை தீர்மானிக்கக்கூடியவாறான அத்தகைய முறையில் குறிப்பீடுசெய்வதற்கும் ;

(உ) கூட்டுத்தாபனத்தின் நோக்கங்களை எய்தப் பெறுவதற்காக எவரேனும் ஆளுடன், இலங்கையிலோ வெளிநாட்டிலோ கூட்டிணைக்கப்பெற்ற அல்லது கூட்டிணைக்கப்பெறாத ஆட்களின் குழுமத்துடன் அல்லது ஏதாவது அரசாங்கத் திணைக்களத்துடன், கூட்டுத்தாபனத்துடன், சபையுடன், மாகாண சபையுடன் உள்ளூரதிகார சபையுடன் உடன்படிக்கைகளை அல்லது ஒப்பந்தங்களைச் செய்துகொள்ளல் ;

(ஊ) கூட்டுத்தாபனத்தின் அலுவலர்களையும், சேவையாளர்களையும் நியமிப்பதற்கும், தொழிலுக்கமர்த்துவதற்கும், பதவிவிலக்குவதற்கும் அல்லது அவர்களின் சேவைகளை முடிவுறுத்துவதற்கும், கூட்டுத்தாபனத்தினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய சம்பளங்களையும் படிகளையும் பணிக்கொடைகளையும் அவர்களுக்கு செலுத்துவதற்கும்.

கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமை செய்தல்.

**5.** (1) கூட்டுத்தாபனத்தின் அலுவல்கள், தலைவர், பணிப்பாளர் நாயகம், செயலாளர், பொருளாளர் மற்றும் கூட்டுத்தாபனத்தின் அப்போதைக்கு வலுவிலிருக்கும் விதிகளுக்கிணங்கத் தெரிவுசெய்யப்படக்கூடிய ஏழு பேருக்குக் குறையாத உறுப்பினர்களைக் கொண்ட முகாமைப் பேரவையொன்றின்மூலம் அப்போதைக்கு வலுவிலிருக்கும் விதிகளுக்கிணங்கவும் நிருவகிக்கப்படுதல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனத்தின் முதலாவது முகாமைப்பேரவை இச்சட்டம் நடைமுறைக்குவரும் தேதிக்கு நேர்முந்திய நாளன்று முகாமைப் பேரவையில் உறுப்பினர்களாக பதவிதாங்கியோரைக் கொண்டிருத்தல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் விதிகள்.

**6.** (1) ஏதேனும் பொதுக்கூட்டத்தில் சமுகமாயிருந்து வாக்களிக்கும் உறுப்பினர்களில் மூன்றில் இரண்டு பங்கினருக்குக் குறையாதோரின் வாக்குப் பெரும்பான்மைகொண்டு, உறுப்பினர்களைச் சேர்த்தல், மீளப்பெறுதல் அல்லது விலக்குதல், முகாமைச் சபையைத் தேர்ந்தெடுத்தல், கூட்டுத்தாபனத்தின் பதவிதாங்குநர்கள், முகவர்கள், அலுவலர்கள், சேவையாளர்கள் என்போரின் கடமைகளை நடாத்துதல், அலுவல்களைக் கொண்டுநடாத்துவதில் கூட்டுத்தாபனத்தினாலும் முகாமைச் சபையினாலும் பின்பற்றப்படவேண்டிய நடவடிக்கைமுறைகள் அத்துடன் பொதுவாக கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமைசெய்தலும் அதன் குறிக்கோள்களை எய்தலும் என்பவற்றுக்காக இச்சட்டத்தின் அல்லது வேறேதேனும் எழுத்திலான சட்டத்தின் ஏற்பாடுகளுடன் ஒவ்வாதனவாகவிராத விதிகளை காலத்துக்குக்காலம் ஆக்குதல் கூட்டுத்தாபனத்துக்குச் சட்டமுறையாதல் வேண்டும். அத்தகைய விதிகள் ஆக்கப்பட்டபோது அதேபோன்ற ஒரு கூட்டத்திலும் அதேபோன்ற முறையிலும் அவை மாற்றப்படலாம், திருத்தப்படலாம் அல்லது ஒழிக்கப்படலாம் அல்லது அவற்றுக்கு எதுவும் சேர்க்கப்படலாம்.

(2) இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு நேர்முந்திய நாளன்று வலுவிலிருக்கும் அமைப்பின் விதிகள், அவை, இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் அல்லது எழுத்திலான வேறு ஏதேனும் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் ஒவ்வாதனவாகவிராத அளவுக்கு இப்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட விதிகளாகக் கருதப்படுதல் வேண்டும்.

(3) கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்கள் கூட்டுத்தாபன விதிகளுக்கு அமைந்தோராதல் வேண்டும்.

அமைப்பினால் செலுத்தப்படற்பாலனவும் அமைப்பினால் செலுத்தப்படவுள்ளதுமான கடன்கள்.

**7.** இச்சட்டம் நடைமுறைக்குவரும் திகதிக்கு நேர்முந்திய நாளன்று அமைப்பின் எல்லாக் கடன்களும் பொறுப்புக்களும் இத்தால் அமைத்துருவாக்கப்படும் கூட்டுத்தாபனத்தினால் கொடுத்துத் தீர்க்கப்படுதல் வேண்டுமென்பதுடன் அத்திகதியன்று அமைப்புக்கு வருமதியாகவுள்ள கடன்கள், உதவுதொகைகள், ஒப்பப்பணங்கள் ஆகியன இச்சட்டத்தின் நோக்கங்களுக்காகக் கூட்டுத்தாபனத்துக்குச் செலுத்தப்படுதலும் வேண்டும்.

*கூட்டுத்தாபனத்தின் இலச்சினை.*

**8.** கூட்டுத்தாபனத்தின் இலச்சினையானது தலைவர் மற்றும் செயலாளரின் முன்னிலையிலன்றி, எத்தன்மையினதுமான சாசனமெதிலும் பொறிக்கப்படுதலாகாதென்பதுடன் ; அவர்கள் தாங்கள் சமுகமாயிருந்ததற்கு அடையாளமாக அச்சாசனத்தில் தங்களது பெயர்களை எழுதி ஒப்பமிடுதல் வேண்டுமென்பதுடன், அவ்வாறு ஒப்பமிடுதலானது எவரேனும் ஆள் சாட்சியாக ஒப்பமிடுவதிலிருந்து தனிவேறானதாதலும் வேண்டும்.

*கூட்டுத்தாபனம் அசைவுள்ள, அசைவற்ற ஆதனத்தை வைத்திருக்கலாம்.*

**9.** ஏதேனும் கொள்வனவு, மானியக்கொடை, கொடை அல்லது இறுதிவிருப்பாவணக் கையளிப்பின்மீது அல்லது வேறுவகையாகக் கூட்டுத்தாபனத்துக்கு உரித்தாக வரக்கூடிய ஏதேனும் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனத்தை, ஒன்றில் பயன் பெறும் சொந்தக்காரராக அல்லது நம்பிக்கைப்பொறுப்பாளராக அல்லது வேறுவகையாக எடுக்கவும் வைத்திருக்கவும் கூட்டுத்தாபனம் ஆற்றலுடையதாதல் வேண்டுமென்பதுடன் அத்தகைய எல்லா ஆதனங்களும் கூட்டுத்தாபனத்தின் அப்போதைக்கு வலுவிலுள்ள விதிகளுக்கமையவும் அத்துடன் தொடர்புபட்ட கையாளுகைச் சாசனத்தின் ஏற்பாடுகளுக்கும், நிபந்தனைகளுக்கமையவும் அவற்றை விற்க, ஈடுவைக்க, குத்தகைக்கு கொடுக்க, கொடுத்து மாற்ற, வில்லங்கத்துக்குட் படுத்த அல்லது பொறுப்பிக்கவுள்ள முழுத்தத்துவத்துடன் இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக கூட்டுத்தாபனத்தினால் வைத்திருக்கப்படுதலும் வேண்டும்.

*கூட்டுத்தாபனத்தின் கணக்குகளும், கணக்காய்வும்,.*

**10.** (1) கூட்டுத்தாபனத்தின் நிதியாண்டு பஞ்சாங்க ஆண்டாதல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனமானது, அதன் வருமானம் மற்றும் செலவினம், சொத்துக்களும் பொறுப்புக்களும் அத்துடன் கூட்டுத்தாபனத்தின் மற்றெல்லாக் கொடுக்கல்வாங்கல்கள் என்பன பற்றிய முறையான கணக்குகளை வைத்திருக்கச் செய்தல் வேண்டும்.

(3) கூட்டுத்தாபனத்தின் கணக்குகள் பேரவையினால் நியமிக்கப்பட்ட ஒரு தகைமைபெற்ற கணக்காய்வாளர் ஒருவரினால் கணக்காய்வு செய்யப்படல் வேண்டும்.

(4) இப்பிரிவில் "தகைமைபெற்ற கணக்காய்வாளர்" என்பது -

(அ) இலங்கைப் பட்டயக் கணக்காளர் நிறுவகத்தின் உறுப்பினராக அல்லது சட்டத்தினால் தாபிக்கப்பட்ட வேறேதேனும் நிறுவகத்தின் உறுப்பினராக இருந்து, அத்தகைய நிறுவகத்தின் பேரவையினால் கணக்காள ரொருவராகத் தொழில்புரிவதற்காக வழங்கப்பட்ட சான்றிதழொன்றைக் கொண்டவராகவுமுள்ள தனியாள் ஒருவர் ; அல்லது

(ஆ) கணக்காளர் குழுமமொன்றின் வதிவுள்ள பங்காளர்களுள் ஒவ்வொருவரும் இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவகத்தின் உறுப்பினரொருவராக அல்லது சட்டத்தினால் தாபிக்கப்பட்ட வேறேதேனும் நிறுவகத்தின் உறுப்பினர் ஒருவராக இருந்து, அத்தகைய நிறுவகத்தினால் கணக்காளரொருவராகத் தொழில்புரிவதற்காக வழங்கப்பட்ட சான்றிதழொன்றைக் கொண்டவராகவுமுள்ள கணக்காளர் குழுமம் ஒன்று,

என்று பொருள்படும்.

குடியரசினதும் ஏனையோரினதும் உரிமைகளைப் பேணுதல்.

**11.** இச்சட்டத்தில் அடங்கியுள்ளதெதுவும், குடியரசின் உரிமைகளையேனும் அல்லது ஏதேனும் அரசியல் அல்லது கூட்டிணைக்கப்பட்ட ஏதேனும் குழுவினது உரிமைகளையேனும் அல்லது இச்சட்டத்தில் குறிப்பிடப்படுகின்றவர்களும், அவர்கள் மூலம், அவர்களிலிருந்து அல்லது அவர்களின் கீழ் உரிமை கோருகின்றவர்களும் தவிர்ந்த வேறெவரேனும் ஆட்களின் உரிமைகளையேனும் பங்கப்படுத்தலோ அல்லது பாதித்தலோ ஆகாது.

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

**12.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்